**நவம்பர் – 14**

# TNPSC துளிகள்

- 2027 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் பருவநிலை மாற்றம் தொடர்பான கட்டமைப்பு உடன்படிக்கையின் (UNFCCC) கீழான 32வது பங்குதாரர்கள் மாநாட்டை (COP32) எத்தியோப்பியா நடத்த உள்ளது.
  - ஐ.நா. காலநிலை மாற்ற மாநாட்டை ஏற்பாடு செய்யும் முதல் கிழக்கு ஆப்பிரிக்க நாடு இதுவாகும்.
- இந்திய ஆயுதப் படைகளின் கிழக்குப் படைப் பிரிவானது, அருணாச்சலப் பிரதேச மாநிலத்தில் உள்ள மெச்சுகாவில் பூர்வி பிரசாந்த் பிரஹார் எனும் முப்படைப் பயிற்சியை நடத்தியது.
- ஹங்கேரிய-பிரிட்டிஷ் எழுத்தாளரான டேவிட் சலாய், "Flesh" என்ற அவரது ஆறாவது புதினத்திற்காக 2025 ஆம் ஆண்டின் புக்கர் பரிசை வென்றார்.
- இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான 11வது மித்ர சக்தி 2025 பயிற்சியானது கர்நாடகாவின் பெலகாவியில் உள்ள வெளிநாட்டுப் பயிற்சி மையத்தில் நடைபெற்று வருகிறது.
- கெய்ரோவில் நடைபெற்ற சர்வதேச துப்பாக்கி சுடுதல் விளையாட்டுக் கூட்டமைப்பின் (ISSF) உலக சாம்பியன்ஷிப் போட்டியின் ஆடவருக்கான 10 மீட்டர் ஏர் பிஸ்டல் போட்டியில் சாம்ராட் ராணா தங்கம் வென்றார்.
  - இதன் மூலம், தனிநபர் ஏர் பிஸ்டல் உலகப் போட்டியில் பட்டத்தை வென்ற முதல் இந்தியத் துப்பாக்கி சுடும் வீரர் என்ற பெருமையை இவர் பெற்றுள்ளார்.
- 2025 ஆம் ஆண்டு நவம்பர் 01 ஆம் தேதி முதல் பதவிக்கு வரும் வகையில், சர்வதேச ஆட்டோமொபைல்ஸ் (வாகன உற்பத்தி) அமைப்பின் (OICA) தலைவராக ஷைலேஷ் சந்திரா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
  - உலகளாவிய மோட்டார் வாகன உற்பத்தியாளர்களின் கூட்டமைப்பிற்குத் தலைமை வகிக்கும் முதல் இந்தியர் என்ற பெருமையை இவர் பெற்றுள்ளார்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## பகல்நேரப் பராமரிப்பு மையங்கள் - அன்புச் சோலை

- முதல்வர் 2025 ஆம் ஆண்டு நவம்பர் 10 ஆம் தேதியன்று, திருச்சியில் அன்புச் சோலை (அன்பின் தோட்டம்) எனப்படும் முதியோர்களுக்கான பகல்நேரப் பராமரிப்பு மையங்களைத் தொடங்கி வைத்தார்.
- இது முதியோர்களின், குறிப்பாக உழைக்கும் வர்க்க குடும்பங்களைச் சேர்ந்தவர்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சமூக நலன் மற்றும் பெண்கள் அதிகாரமளித்தல் துறையின் கீழ் தமிழ்நாடு முழுவதும் மொத்தம் 25 மையங்கள் நிறுவப்பட்டுள்ளன.
- இந்த மையங்கள் உட்புற விளையாட்டுகள், உடலியக்க மருத்துவம், கைவினைப் பொருட்கள் தயாரிப்புப் பயிற்சி, காலை உணவு மற்றும் மதிய உணவு போன்ற வசதிகளை வழங்கும்.
- முதல் கட்டத்தில், 10 நகராட்சிகளில் தலா இரண்டு மையங்களும், சென்னை மாநகராட்சியில் சோழிங்கநல்லூர், தண்டையார்பேட்டை மற்றும் விருகம்பாக்கம் ஆகிய மூன்று இடங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன.




## இந்தியாவின் முதல் 'மகளிர் நலனுக்கான நடமாடும் மருத்துவ சேவை' வாகனங்கள்




- தமிழ்நாடு அரசானது இந்தியாவின் முதல் 'மகளிர் நலனுக்கான நடமாடும் மருத்துவ சேவை' என்ற வாகனங்கள் சேவையைத் தொடங்க உள்ளது.
- இந்த திட்டத்தின் கீழ் 38 மாவட்டங்களில் மொத்தம் 38 வாகனங்கள் செயல்படுத்தப் படும்.
- இந்த வாகனங்கள் கர்ப்பப்பை வாய் புற்றுநோய் மற்றும் மார்பகப் புற்றுநோய்க்கான பரிசோதனை உட்பட பெண்களுக்கான சுகாதாரப் பரிசோதனைகளை மேற்கொள்ளும்.
- இந்தத் திட்டம் சமூக நலத்துறை மற்றும் சுகாதாரத் துறையால் செயல்படுத்தப் படுகிறது.


## 2025 ஆம் ஆண்டு உத்யோக் சமகம் நிகழ்ச்சியில் தமிழ்நாடு

- 2024 ஆம் ஆண்டு வணிகச் சீர்திருத்தச் செயல் திட்டத்தின் (BRAP) கீழ் நான்கு அளவுருக்களில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- புது டெல்லியில் நடைபெற்ற உத்யோக் சமகம் 2025 நிகழ்ச்சியில் இந்த அங்கீகாரம் அறிவிக்கப்பட்டது.
- இந்த நிகழ்வை தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை (DPIIT) ஏற்பாடு செய்தது.
- வணிக நுழைவு, கட்டுமான அனுமதிகள், தொழிலாளர் சேவை வழங்கீட்டாளர்கள் மற்றும் நில நிர்வாகத்தில் சீர்திருத்தங்களுக்காக வேண்டி தமிழக மாநிலம் இந்த அங்கீகாரத்தினைப் பெற்றது.




# தேசியச் செய்திகள்

## நீர்நிலைகளுக்கான மஹோத்சவம் 2025





- மத்திய வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் ஆந்திராவின் குண்டூரில் நீர்நிலைகளுக்கான மஹோத்சவம் என்ற நிகழ்வினைத் தொடங்கி வைத்தார்.
- இந்த நிகழ்வு கிராமப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தின் கீழ் நிலவளத் துறையால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய நீர்நிலைகள் மாநாட்டின் ஒரு பகுதியாகும்.
- நிலையான மண் மற்றும் நீர் வளங்காப்பினை ஊக்குவிப்பதையும் நீர்நிலைகளின்

மேம்பாட்டில் பொதுமக்களின் பங்களிப்பை வலுப்படுத்துவதையும் இந்த மஹோத்சவம் நோக்கமாகக் கொண்டிருந்தது.

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதச் சட்டம் (MGNREGA) மூலம் முந்தைய நீர்நிலைகள் திட்டங்களின் கீழ் உருவாக்கப்பட்ட கட்டமைப்புகளை மீட்டெடுப்பதற்காக நீர்நிலைகள் புத்துயிர்ப்புத் திட்டம் தொடங்கப்பட்டது.
- இந்த முன்னெடுப்பு இந்தியா முழுவதும் நீர் வளங்காப்பு, தகவமைவு கொண்ட வேளாண்மை மற்றும் நிலையான கிராமப்புற வாழ்வாதாரங்கள் ஆகியவற்றில் அரசாங்கம் மேற்கொண்ட கவனத்தை எடுத்துக் காட்டுகிறது.

## கருவிழி மாற்று அறுவை சிகிச்சைக்கான வழிகாட்டுதல்கள் 2025




- சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகமானது, 2025 ஆம் ஆண்டு மனித உறுப்புகள் மற்றும் திசுக்கள் மாற்று அறுவை சிகிச்சை (திருத்தம்) விதிகளை அறிவித்தது.
- 1994 ஆம் ஆண்டு மனித உறுப்புகள் மற்றும் திசுக்கள் மாற்று அறுவை சிகிச்சை சட்டத்தின் கீழ் இந்த விதிகள் வெளியிடப்பட்டன.
- இந்தத் திருத்தமானது, தேசிய உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைத் திட்டத்தை (NOTP) வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கருவிழி மாற்று அறுவை சிகிச்சை மையங்களுக்கு இனி கட்டாய மருத்துவ ஸ்பெகுலர் உபகரணங்கள் தேவையில்லை.
- இந்த மாற்றம் ஆனது கிராமப்புற மற்றும் சார்புநிலை நகர்ப்புறங்களில் உள்ள சிறிய கண் மருத்துவ சேவை மையங்களுக்கான செயல்பாட்டுச் சவால்களை எளிதாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இந்தியா முழுவதும் கருவிழி தானம் மற்றும் மாற்றுச் சேவைகளுக்கான அணுகலை மேம்படுத்துவதே இந்தத் திருத்தத்தின் நோக்கமாகும்.


## கோ-ஆப் கும்பம் 2025 மாநாடு




- மத்திய கூட்டுறவு அமைச்சர், புது டெல்லியில் நடைபெறும் நகர்ப்புற கூட்டுறவு கடன் துறை குறித்த கோ-ஆப் கும்பம் 2025 எனப்படும் சர்வதேச மாநாட்டினைத் தொடங்கி வைத்தார்.
- தேசிய நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் கடன் சங்கங்கள் லிமிடெட் (NAFCUB) மற்றும் நகர்ப்புற அமைப்புகள் ஆனது கூட்டுறவு வங்கி கட்டமைப்புகளை மறு வடிவமைப்பு செய்வதற்கான வழிகாட்டுதல்களை வெளியிடும்.
- ஐந்து ஆண்டுகளுக்குள் இரண்டு லட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு நகரத்திலும் ஒரு நகர்ப்புறக் கூட்டுறவு வங்கியை நிறுவுவதை அரசாங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கூட்டுறவுத் துறைக்கான நிபுணர்களைப் பயிற்றுவிப்பதற்காக திரிபுவன் கூட்டுறவு பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டுள்ளது.
- சஹாகர் டிஜிபே மற்றும் சஹாகர் டிஜிலோன் செயலிகள் போன்ற டிஜிட்டல் முன்னெடுப்புகள் ஆனது சிறிய நகர்ப்புறக் கூட்டுறவுச் சங்கங்கள் அவற்றை டிஜிட்டல் வழி பண வழங்கீடுகளுக்குத் தகவமைக்க உதவும்.

# சர்வதேசச் செய்திகள்

## பாகிஸ்தானில் 27வது அரசியலமைப்புத் திருத்தம்





- பாகிஸ்தான் நாடாளுமன்றத்தின் 27வது அரசியலமைப்புத் திருத்தம் ஆனது எதிர்க் கட்சிகளின் நாடு தழுவிய போராட்டங்களைத் தூண்டியது.

- இந்தத் திருத்தம் கூட்டுப் பணியாளர் குழுவின் தலைவருக்குப் பதிலாக புதிய பாதுகாப்புப் படைத் தலைவரை நியமிப்பதற்கும், ஒரு கூட்டாட்சி அரசியலமைப்பு நீதிமன்றத்தை உருவாக்குவதற்கும் முன்மொழிகிறது.
- இது உயர் நீதிமன்ற நீதிபதிகள் நியமனத்தை மாற்றுவதற்கும், உச்ச நீதிமன்றத்தின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்துவதற்கும் முயல்கிறது.
- இது சட்டமாக மாறுவதற்கு முன்பு அரசாங்கத்திற்கு இரு அவைகளிலும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஒப்புதல் தேவையாகும்.
- எதிர்க்கட்சி குழுக்கள் இந்த நடவடிக்கை அரசியலமைப்பை அச்சுறுத்துவதாகக் கூறுகின்றன அதே நேரத்தில் சில சட்ட வல்லுநர்கள் இதை ஒரு நீதித்துறைக்கான சீர்திருத்தமாகக் கருதுகின்றனர்.

## தட்டம்மை பாதிப்பற்ற கனடா என்ற நிலை ரத்து

- நாடு முழுவதும் 5,000க்கும் மேற்பட்ட பாதிப்புகள் பதிவானதையடுத்து, கனடா 2025 ஆம் ஆண்டில் தட்டம்மை ஒழிப்பு நிலையை இழந்தது.
- 2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் தொடங்கிய இந்தத் தொற்றானது பல மாகாணங்கள் மற்றும் வடமேற்குப் பிரதேசங்களில் பாதிப்பினை ஏற்படுத்தியது.
- மிகவும் தொற்றுமிக்க தட்டம்மையானது, இருமல் மற்றும் தும்மல் வழியாக காற்றில் பரவுகிறது என்பதோடு மேலும் தட்டம்மை, பொன்னுக்கு வீங்கி மற்றும் ரூபெல்லா (MMR) தடுப்பூசி மூலம் தடுக்கக் கூடியது.
- கனடாவில் 2019 ஆம் ஆண்டில் 89.5 சதவீதமாக இருந்த தடுப்பூசி வழங்கீடு ஆனது 2023 ஆம் ஆண்டில் 82.5 சதவீதமாகக் குறைந்தது என்பதோடு இது பெருமளவிலான நோய் எதிர்ப்பு உருவாக்கத்திற்குத் தேவையான 95 சதவீதத்தை விடக் குறைவாகும்.




# பொருளாதாரச் செய்திகள்

## வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கான ஒருங்கிணைந்த டிஜிட்டல் தளம்

- தேசியப் பத்திரங்கள் வைப்புத்தொகை லிமிடெட் (NSDL) நிறுவனமானது, வெளிநாட்டுத் தொகுப்பு முதலீட்டாளர்கள் (FPI) மற்றும் வெளிநாட்டுத் துணிகர

மூலதன முதலீட்டாளர்கள் (FVCI) ஆகியவற்றிற்கான ஒருங்கிணைந்த டிஜிட்டல் வலை தளத்தினைத் தொடங்கியுள்ளது.

- இந்தியாவின் மூலதனம் மற்றும் பத்திரச் சந்தைகளில் முதலீடு மேற்கொள்ளும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கான பதிவு மற்றும் இணக்கத்தை இந்தத் தளம் நெறிப் படுத்துகிறது.
- இது பல உள்நுழைவுகள் மற்றும் நேரடி நடைமுறைகளைகளுக்கு மாற்றாக, FPI மற்றும் FVCI பதிவுகளை ஒரே இடைமுகமாக ஒருங்கிணைக்கிறது.
- இந்த அமைப்பில் தானியங்கி நிரந்தர கணக்கு எண் (PAN) கோரிக்கைகள், வழி காட்டப் பட்டச் செயல்பாடுகள், விண்ணப்பக் கண்காணிப்பு மற்றும் முழு தணிக்கை தடங்கள் உள்ளன.
- 1996 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட NSDL ஆனது, அதன் வைப்புத்தொகை வலையமைப்பு மூலம் இந்தியா முழுவதும் மின்னணுமயமாக்கப்பட்ட வடிவத்தில் பத்திரங்களை நிர்வகிக்கிறது.





# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## புற்றுநோய் உயிரியல் குறிப்பான்கள் குறித்த சோதனைகள்

- சர்வியர் இந்தியா நிறுவனமானது இரத்தப் புற்றுநோய் (லுகேமியா) மற்றும் பித்த நாள புற்றுநோய்க்கான மலிவு விலையிலான உயிரியல் குறிப்பான்கள் சோதனை முன்னெடுப்பினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- மூலக்கூறு சோதனைக்கான அணுகலை மேம்படுத்துவதற்காக என்று மெட்ஜெனோம் மற்றும் ஸ்ட்ராண்ட் லைஃப் சயின்சஸ் ஆகியவற்றுடன் இணைந்து இந்த முன்னெடுப்பு தொடங்கப் பட்டது.
- இந்தியா முழுவதும் மானிய விலையில் சோதனைகளுடன் கடுமையான மைலாய்டு லுகேமியா (AML) மற்றும் சோலாஞ்சியோகார்சினோமா (CCA) ஆகியவற்றின் மீது இது கவனம் செலுத்தியது.
- அரசுத் துறைக்கு இலவச ஐசோசிட்ரேட் டீஹைட்ரோஜினேஸ் 1 (IDH1) மற்றும் ஐசோசிட்ரேட் டீஹைட்ரோஜினேஸ் 2 (IDH2) பிறழ்வு சோதனை வழங்கப்பட்டது.
- ஆரம்பகால நோயறிதலை ஆதரிப்பதையும் துல்லியமான புற்றுநோய்ப் பராமரிப்பை

விரிவுபடுத்துவதையும் இந்த முன்னெடுப்பு நோக்கமாகக் கொண்டது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## உலகளாவிய பருவநிலை உறுதிப்பாடு




- பாகுவில் நடைபெறும் COP29 மாநாடு ஆனது, 2035 ஆம் ஆண்டிற்குள் வளர்ந்து வரும் நாடுகளுக்கு ஆண்டுதோறும் சுமார் 1.3 டிரில்லியன் டாலர் பருவநிலை நிதியைத் திரட்டுவதை நோக்கமாகக் கொண்ட பாகு-பெலெம் என்ற செயல் திட்டத்தினை நிர்ணயித்தது.
- பருவநிலை நடவடிக்கைகளுக்கான நிதியை விரிவுபடுத்துவதற்காக, மீள் நிரப்புதல், மறு சமநிலைப்படுத்துதல், மறுசீரமைத்தல், புதுப்பித்தல் மற்றும் மறுவடிவமைப்பு செய்தல் ஆகிய ஐந்து முன்னுரிமைகளை இந்தச் செயல் திட்டம் குறிப்பிட்டுக் காட்டியது.
- பிரேசிலின் பெலெமில் நடைபெறும் COP30 மாநாட்டில், இந்த இலக்குகளை உலக நாடுகள் பருவநிலை நீதி மற்றும் சமமான நிதிக்கான மேம்படுத்தக் கூடிய நடவடிக்கைகளாக மாற்றும் என்று எதிர்பார்க்கப் பட்டது.
- இந்த உச்சி மாநாடு பலதரப்பு மேம்பாட்டு வங்கிகளை (MDBs) சீர்திருத்துதல், கடன் வழங்கீட்டினை மேம்படுத்துதல் மற்றும் கார்பன் சந்தை ஒருமைப்பாட்டை வலுப் படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தியது.

### ஐ.நா. நீர் ஒப்பந்தத்தில் முதல் தெற்காசிய நாடு – வங்காளதேசம்





- ஐக்கிய நாடுகள் சபையின் (ஐ.நா.) நீர் உடன்படிக்கையில் இணைந்த தெற்காசியாவின் முதல் நாடாக வங்காளதேசம் ஆனது.
- இந்த மாநாடு ஆனது அதிகாரப்பூர்வமாக பன்னாட்டு நீர்நிலைகள் மற்றும் சர்வதேச ஏரிகளின் பாதுகாப்பு மற்றும் பயன்பாடு குறித்த உடன்படிக்கை என்று அழைக்கப் படுகிறது.
- உலக நாடுகளுக்கு இடையே பகிரப்பட்ட நீர் வளங்களின் ஒத்துழைப்பு மற்றும் நிலையான மேலாண்மையை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நீர்ப் பாதுகாப்பு மற்றும் பன்னாட்டு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக வங்காள தேசம் இந்த உடன்படிக்கையில் இணைந்தது.
- இந்த நாடானது, கங்கை, பிரம்மபுத்திரா மற்றும் மேக்னா போன்ற முக்கிய நதிகளை இந்தியா மற்றும் சீனாவுடன் பகிர்ந்து கொள்கிறது.

## அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்


### இந்தியத் திறன் அறிக்கை 2026

- இந்த அறிக்கையை கல்வி சோதனை சேவை (ETS) அமைப்பானது, இந்திய தொழில் துறை கூட்டமைப்பு (CII), AICTE, இந்தியப் பல்கலைக்கழகங்களின் சங்கம் (AIU) மற்றும் Taggd ஆகியவற்றுடன் இணைந்து வெளியிட்டது.
- 2026 ஆம் ஆண்டு இந்தியத் திறன் அறிக்கையில், இந்தியாவின் வேலைவாய்ப்பு வழங்கல் திறன் ஆனது கடந்த ஆண்டு இருந்த 54.81 சதவீதத்திலிருந்து தற்போது 56.35% ஆக அதிகரித்துள்ளது.
- உத்தரப் பிரதேசம், மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா ஆகியவை 2026 ஆம் ஆண்டிற்கான மிக அதிக வேலைவாய்ப்பு வழங்கல் நிலைகளைக் கொண்டுள்ளன.
- உலகளாவிய செயற்கை நுண்ணறிவு (AI) திறமை கொண்ட நிபுணத்துவத்தில் இந்தியா 16% பங்கைக் கொண்டுள்ளது என்பதோடு இது 2027 ஆம் ஆண்டிற்குள் 1.25 மில்லியன் நிபுணர்களை எட்டும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.




## மாநிலச் செய்திகள்

### டெல்லி குண்டுவெடிப்பு 2025




- 2025 ஆம் ஆண்டு நவம்பர் 10 ஆம் தேதியன்று டெல்லியில் உள்ள செங்கோட்டை மெட்ரோ நிலையம் அருகே ஒரு கார் வெடித்தது.
- அந்தக் காரில் அம்மோனியம் நைட்ரேட் எரிபொருள் எண்ணெய் (ANFO) இருந்திருக்கலாம் என்று புலனாய்வாளர்கள் சந்தேகிக்கின்றனர்.
- ANFO என்பது எரிபொருள் எண்ணெயுடன் நுண்ணிய அம்மோனியம் நைட்ரேட்டைக் கலப்பதன் மூலம் தயாரிக்கப்படும் ஒரு பொதுவான தொழில்துறைப் பயன்பாட்டு வெடிபொருள் ஆகும்.
- அம்மோனியம் நைட்ரேட் என்பது மணமற்ற, வெள்ளை படிக இரசாயனமாகும் என்பதோடு இது பொதுவாக உரம் மற்றும் வெடிபொருட்களை தயாரிக்கப் பயன்படுகிறது.
- ஒரு சக்திவாய்ந்த ஆக்ஸிஜனேற்றியான இது சரியான சூழலில், ஓர் இரசாயன கலவை

விரைவாக பெரிய அளவிலான வெப்பமான வாயுக்களாக சிதைவதை உள்ளடக்கிய ஒரு பெரிய வெடிப்பை ஏற்படுத்தும்.

- அம்மோனியம் நைட்ரேட் குண்டிலிருந்து உருவாகும் சிதைவு வினை, நைட்ரஸ் ஆக்சைடு மற்றும் நீராவியை வெளியிடுகின்ற ஒரு வெப்ப உமிழ் வினையை உருவாக்குகிறது.
- அவை விரைவாக விரிவடையும் திறன் கொண்டது (ஆரம்ப அளவை விட 1,000 மடங்கு வரை).
- இந்த வினையானது, அருகாமைப் பகுதிகளில் 2,000 டிகிரி செல்சியஸ் வரையிலான அதிக வெப்பத்தையும் உருவாக்குகிறது.
- ஆனால் அம்மோனியம் நைட்ரேட் ஒரு வெடிபொருளாகக் கருதப்படுவதில்லை.


## பலதார மண தடை மசோதா 2025 – அசாம்




- தனது மாநிலத்தில் பலதார மணத்தைத் தடை செய்வதற்கான மசோதாவை அசாம் அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.
- துணைவி உயிருடன் இருந்து, சட்டப் பூர்வமாகப் பிரிக்கப்படாவிட்டால், அல்லது விவாகரத்து ஆணை அவர்களின் முந்தைய திருமணத்தை செல்லாதது ஆக்கவில்லை என்றால், எந்தவொரு தனிநபரும் வேறொரு திருமணம் செய்து கொள்வதை இந்த மசோதா தடை செய்கிறது.
- ஆறாவது அட்டவணை பகுதிகளுக்கு சில விதிவிலக்குகள் பொருந்தக் கூடும்.
- இந்த மசோதாவின் கீழ் தண்டனை விதிக்கப்பட்டால் ஏழு ஆண்டுகள் வரையில் கடுமையான சிறை தண்டனை விதிக்கப்படலாம்.
- பலதார மணத்தால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு இழப்பீடு வழங்க அரசாங்கம் ஒரு நிதியை உருவாக்க திட்டமிட்டுள்ளது.

# முக்கிய தினங்கள்


## உலக நோய்த்தடுப்பு தினம் 2025 - நவம்பர் 10




- தடுப்பூசிகளின் முக்கியத்துவம் குறித்து உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், தொற்று நோய்களைத் தடுப்பதற்கான தடுப்பூசிக்கான உலகளாவிய அணுகலை ஊக்குவிப்பதும் இதன் நோக்கமாகும்.
- இந்த அனுசரிப்பு ஆனது 2012 ஆம் ஆண்டில் உலக சுகாதார அமைப்பால் (WHO) நிறுவப் பட்டது.
- தடுப்பூசி வழங்கல் என்பது போலியோ, தட்டம்மை மற்றும் பெரியம்மை போன்ற நோய்களைத் தடுக்க உதவுகிறது என்பதோடு மேலும் பெருமளவிலான நோய் எதிர்ப்பு சக்தி மூலம் பாதிக்கப்படக்கூடிய மக்களைப் பாதுகாக்கிறது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Immunization for All is Humanly Possible" என்பதாகும்.

## தேசிய கல்வி தினம் 2025 - நவம்பர் 11

- சுதந்திர இந்தியாவின் முதல் கல்வி அமைச்சர் மௌலானா அபுல் கலாம் ஆசாத்தின் பிறந்த நாளைக் குறிக்கும் வகையில் இந்த நாள் கொண்டாடப்படுகிறது.
- இந்தியாவின் கல்வி அமைப்பிற்கு அவர் அளித்தப் பங்களிப்புகளைக் கௌரவிப்பதையும், தேசிய மேம்பாட்டிற்குக் கற்றலின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஊக்குவிப்பதையும் இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "AI and Education – Preserving Human Agency in a World of Automation" என்பதாகும்.
- மௌலானா அபுல் கலாம் ஆசாத், பல்கலைக்கழக மானியக் குழு (UGC), கரக்பூரின் இந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகம் (IIT) மற்றும் அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்வி சபை (AICTE) போன்ற முக்கிய நிறுவனங்களை நிறுவுவதில் பங்களித்தார்.


Maulana Abul Kalam Azad—freedom fighter, scholar, poet, and journalist—was born on Nov 11, 1888
Enigmatic Educator
Youngest President of the Indian National Congress, at 35
Most prominent Muslim leader to oppose the creation of Pakistan
Became first Minister of Education in independent India
His birth anniversary is observed as National Education Day
Refused Bharat Ratna, was awarded posthumously in 1992
"I am a part of the indivisible unity that is Indian nationality"

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★